RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22335

OPEN ACCESS

# தொல்காப்பியத்தில் பண்பாட்டு விழுமியங்கள்

வா. போதுமணி [அ, *], தி. கமலி [அ]

[அ] தமிழ்த்துறை, அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானல்-624101, தமிழ்நாடு, இந்தியா.

# A Study of Cultural Values in Tolkappiyam

V. Pothumani [a, *], T. Kamali [a]

[a] Department of Tamil, Mother Teresa Women's University, Kodaikanal-624101, Tamil Nadu, India

* Corresponding Author: pothumani1804@gmail.com

Received: 04-04-2022
Revised: 01-07-2022
Accepted: 08-07-2022
Published: 28-07-2022

Check for updates

**ABSTRACT**

Habits are regular routines that Tamil people engage in. They became the norm as they continued to be followed in life. Among these, habits come through practice. Traditions are based on customs. As a result, culture developed from the aspects of life that serve as examples of morality to the outside world. Being nurtured, cultured, groomed, or rectified, cultivated, cultivated as a way of life. Value among them all refers to the idea that concepts serve as the foundation for individual thoughts. It reflects the typical behaviours and thoughts of the majority of people in a society. On the basis of this, it is clear that a society's cultural elements consist of its arts, beliefs, conventions, language, literature, values, etc. This article is a study on the way they are taken in the Tolkappiyam.

**Keywords:** Tholkappiyam, Sangam Literature, Cultural Values, Society

## முன்னுரை

பண்பாடு என்பது பண்படுவது, பண்படுதல், சீர்படுதல், அல்லது திருத்துதல், பக்குவப்பட்ட தன்மை, வாழ்க்கை முறை, என்றெல்லாம் பொருள் கொள்ளப்படுகின்றது. அவற்றுள் விழுமியம் என்பது தனிமனித எண்ணங்கள் கருத்துக்கள் என்பவற்றின் உருவாக்கத்தின் அடிப்படையில் அமைந்துள்ளதைக் குறிக்கின்றது. ஒரு சமுதாயத்தில் வாழுகின்ற பெரும்பான்மை மக்களின் ஒருமித்த நடத்தைகளையும் எண்ணங்களையும் அது பிரதிபலிக்கிறது. இதனடிப்படையில் ஆராயும்போது ஒரு சமுதாயத்தில் அமைந்துள்ள கலை, நம்பிக்கை, பழக்கவழக்கங்கள், மொழி, இலக்கியம், விழுமியங்கள் போன்றவை அந்த சமுதாயத்தின் பண்பாட்டுக் கூறுகளாக அமைகின்றதை காணமுடிகிறது.

## களவு வாழ்க்கை

தொல்காப்பியம் தொன்மைக் காலத்தில் இடம் பெற்ற தனிமனித விழுமியங்களை ஒழுங்கமைப்பதை நோக்கமாகக் கொண்ட இலக்கண நூலாகத் திகழ்கின்றது. அதனுள் தனிமனிதனுடைய வாழ்வைப் பிரதிபலிக்கும் ஒன்றாகக் களவு இடம் பெற்றுள்ளது. அத்தகைய “களவாவது பிறருக்குரிய பொருளை மறையிற் கோடல் இன்னதன்றி ஒத்தார்க்கும் மிக்கார்க்கும் பொதுவாகிய கன்னியரைத் தமர் கொடுப்ப கொள்ளாது கன்னியர் தம் இச்சையினால் தமரை மறைத்துப் புணர்ந்துப் பின்னும் அறநிலை விழாமல் நிற்றல்” என்பதை நயமுடன் எடுத்துரைக்கிறது (Parimelalhagar, 2010). இக்களவினை தொல்காப்பியம்

"காமப் புணர்ச்சியும் இடந்தலைப் படலும்

பாங்கொடு தழாஅலும் புணர்வுமென்று

ஆங்க நால்வகையினும் அடைந்த சார்வொடு

மறையென மொழிதல் ஆறே"

என்று கூறுகிறது. இதனை களவு என்று கூறாமல் மறையென்று கூறியதற்கு இது தீமை பயக்கும் 'களவு அன்று என்பதனால் ஆகும் (Ilampuranar, 2010). தலைவன் தலைவியர் தாய் தந்தையருக்குத் தெரியாமல் மறைவான இடத்தில் சந்திப்பதனாலும் மறையெனப்பட்டது' என்பர். இத்தகைய மறைந்தொழுகும் களவினைத் தொல்காப்பியம் தமிழருடைய வாழ்வியல் இலக்கணப் பண்பாட்டில் ஒன்றாகச் சுட்டியுள்ளதைக் காணலாம். இக்கருத்து களவு வாழ்க்கையில் அன்று முதல் இன்று வரை தமிழர் தம்முடைய வாழ்வில் இன்றியமையாப் பண்பாட்டு விழுமியங்களில் ஒன்றாகக் கடைபிடித்து வருவதைத் தொல்காப்பியம் நமக்கு உரைக்கிறது.

## கற்பு வாழ்க்கை

தமிழரின் பண்பாட்டில் கற்பு என்பது களவு வாழ்க்கைக்குப் பிறகு நிகழும் உன்னதமான ஒழுக்கமாகும். தலைவியைப் பெற்றோர் கொடுக்கப் பலரறிய மணந்து வாழும் மணவாழ்க்கையைக் கற்பு வாழ்க்கை என்று கூறுவர். இவ்வாழ்வில் ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் நல்லூலின்கண் எதிர்ப்பட்டு உள்ளப்புணர்ச்சியிற் கூடி ஒழுகினவராயினும் தலை மகளுடைய பெற்றோர் உடன்பாடின்றி அவ்விருவரும் அம்மனை இல்லற வாழ்க்கையை வாழ்வதற்குறிய உள்ளத்து உறுதியை உலகத்தார் அறிய திருமணச் சடங்குகளுடன் முறைப்படி திருமணம் செய்து கொள்ளுதலைக்,

"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்

கொளற்குரிய மரபின் கிழவன் கிழத்தியைக்

கொடைக்குரி மரபினோர் கொள்வதுவே"

என்று தொல்காப்பியம் மொழிந்துள்ளது (Ilampuranar, 2010). இத்தகைய திருமணத்திற்குப் பிறகு நிகழும் கற்பு வாழ்க்கையைப் பெரும்பாலும் தமிழ் மக்களிடையே இன்றும் காண முடிகிறது. மேலும் இதனை விளக்கும் முகத்தான் தொல்காப்பியம்,

"மறைவெளிப் படுதலும் தமரிற் பெறுதலும்

இவை முதலாகிய இயனெறி திரியாது

மலிவும் புலவியும் ஊடலும் உணர்வும்

பிரிவொடு புணர்ந்தது கற்பெனப்படுமே"

என்று கூறியுள்ளமை இதற்கு மேன்மேலும் சிறப்பு சேர்ப்பதாக அமைந்துள்ளது (Ilampuranar, 2010).

## விருந்தோம்பல்

தமிழ் மக்களின் வாழ்வில் விருந்தோம்பல் இன்றியமையாத இடத்தைப் பெறுகிறது. இத்தகைய 'விருந்து' என்னும் சொல்லுக்குப் 'புதுமை' என்ற பொருள் உண்டு. அதுபோல விருந்தினர் என்றால் 'புதியவர்' என்று கூறுதல் பொருந்தும். இஃது நட்பும் சுற்றமும் அல்லாமல் புதிதாக நம்வீட்டிற்கு வருபவரை அன்புடன் உபசரித்து உணவிடுதலே ஆகும். ஆகையால் தான் இவ் விருந்தோம்பல் தமிழர் நாகரீகத்தின் அடையாளச் சின்னமாகத் திகழ்கிறது. எனவே இதனை தொல்காப்பியர்,

'விருந்துதானே புதுவது கிளந்த யாப்பின மேற்றே'

என்று கூறினார் போலும். இத்தகைய விருந்தோம்பலைக்,

“கற்பும் காமமும் நற்பாலொழுக்கமும்

மெல்லியற் பொறையுந் நிறையும் வல்லிதின்

விருந்து புறந் தருதலுஞ் சுற்றம் ஓம்பலும்

பிறவு மன்ன கிழவோள் மாண்புகள்”

என்று தொல்காப்பியர் கூறுவதிலிருந்து அவரது காலகட்டத்தில் வாழ்ந்த தொன்மைக்கால இல்லறப் பெண்களுக்குரிய தலையாய கடமைகளில் ஒன்றாக விருந்தோம்பல் இருந்துள்ளது (Ilampuranar, 2010). இவ்வாறு தொல்காப்பியம் மொழிந்துள்ளமை தமிழரின் பண்பாட்டில் விருந்தோம்பல் தொன்மைக் காலத்திலிருந்தே நிலையான இடத்தைப் பெற்றுள்ளதைக் காட்டுகிறது.

சங்க இலக்ககியத்தில் தலைவியானவள் இரவு நேரத்திலும் மகமலர்ச்சியுடன் விருந்தினரை உபசரித்தலை,

“அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்

முல்லை சான்ற கற்பின் மெல்லி”

என்று நற்றிணை எடுத்துரைக்கிறது (Subramanian, 2007). இதனைப் பிற்காலத்தில் திருக்குறள் இல்லற மகளிரின் இன்றியமையாப் பண்புகளில் ஒன்றான விருந்தோம்பல் அகமும் புறமும் மலர்ந்து செய்ய வேண்டும் எனும் பண்பாட்டினை,

“அகனமர்ந்து செய்யான் உறையும் முகனமர்ந்து

நல்விருந்து ஓம்புவான் இல்”

என்னும் குறட்பா மூலம் குறிப்பிட்டுள்ளதும் இதற்கு மிகப் பொருந்தும் (Parimelalhagar, 2015).

## உயிர்ப் பகுப்பும் தன்மையும்

பழந்தமிழரிடம் உயிர்களைப் பகுத்தறியும் அறிவியல் தொழில்நுட்பம் சார்ந்த பகுத்தறியும் பண்பாடு அவை நவீனமடையாக் காலத்தில் இருந்துள்ளதை,

“ஒன்றறி வதுவே உற்றறி வதுவே

இரண்டறி வதுவே அதனொடு நாவே

மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே

நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே

ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே

ஆறறி வதுவே அவற்றொடு மன்னே

நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே”

இதன் வழி தொல்காப்பியர் காலத்தமிழர் உயிர்களைப் பகுத்தறிந்து அவற்றில் தமக்குறிய உயிர்களைப் பழக்கி வைத்திருந்தமையும் அவற்றில் சில தெய்வமாகக் கருதப்படும் பண்பாட்டினையும் இன்றும் நாம் காணமுடிகிறது (Subramanian, 2008).

## திணை மயக்கம்

ஒரு திணைக்குரிய முதற்பொருள் மற்றோர் திணைக்குரிய முதற் பொருள்களோடு சேர்ந்து வருதல் கடியப்படுதல் இல்லை என்பதனை தொல்காப்பியர்

“திணைமயக் குறுதலும் கடிநிலை இலவே

நிலன் ஒருங்கும் மயங்குதல் இல்லென மொழிய

புலன் நன்கு உணர்ந்த புலமை யோரே” (Subramanian, 2008).

மேலும் இதற்கு

“ஊசிபோகிய சூழ்செய் மாலையன்

பக்கம் சேர்த்திய செச்சைக் கண்ணியன்

பகுயமண் டாகம் செஞ்சாந்து நீவி”

என்னும் பாடலில் மருதத்திற்கு கருப்பொருளாகிய கழுநீரும், குறிஞ்சிக்குறிய வெட்சிப்பூவும், அணிந்தோன் என்றமையால் கருப்பொருள் மயக்கமாயிற்று என்று இளம்பூரணர் சுட்டுவதையும் சான்றாகக் கொள்ளலாம் (Subramanian, 2007).

“ஊரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே”

என்று மொழிந்துள்ளதை ஆராயும் போது முதல் பொருளாகிய நிலம் மட்டும் மயங்கிய நிலையில் இன்று பொழுதும், கருப்பொருளாகிய தெய்வம், முதலாக பதினான்கும், அதற்குரிய உரிப்பொருளும், பொருள்களும் மயங்கும் (Ilampuranar, 2010). இதனுள் பல்வேறு இனத்தை சேர்ந்த மொழி பேசும் மக்களும், வெவவேறு இனத்தைச் சேர்ந்த மக்களும், வெவவேறு பண்பாட்டைக் கடைபிடிக்கும் மக்களும், தமிழ் பண்பாட்டோடு இரண்டர கலந்து வாழ்வதற்கு வழிவகை செய்துள்ளதை நமக்கு உணர்த்துகிறது.

## நாளும் கோளும்

பண்டையத் தமிழர் பண்பாட்டில் ஒரு செயலை செய்வதற்கு நல்ல நாள், கெட்ட நாள் பார்க்கும் பழக்கம் இருந்துள்ளதை,

“மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும்

துறந்த ஒழுக்கம் கிழவற்கு இல்லை”

என்று தொல்காப்பியம் கூறுகிறது (Ilampuranar, 2010). இதனுள் மறைவொழுக்கமாகிய களவொழுக்கத்தில் ஓரை நாள் போன்றவற்றைப் பார்த்து அவற்றைத் துறக்கும் ஒழுக்கம் தலைவனுக்கு இல்லை. ஓரை என்பது நல்ல முகூர்த்தம். தலைவி மாட்டு மிகுந்த அன்பின் காதலால் அறத்திலிருந்து வழுவினான் அல்லன் தலைவன் என்பது பெறப்படுகிறது நல்ல நாள் பார்ப்பதோடு நின்றுவிடவில்லை நல்ல சகுனம் பார்ப்பதிலும் கவனம் செலுத்தியுள்ளார்கள் என்பதனை,

“அச்சமும் உவகையும் எச்சமும் இன்று

நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்

காலம் கண்ணிய ஓம்படை”

என்று பகரும் தொல்காப்பிய வரிகள் அச்சம் உவகை இரண்டும் ஒழிவின்றி நல்ல நாள், தீய நாள் முதலிய சகுணங்களாலும், காலம் கருதிய பாதுகாவலும், கடைபிடிக்கப்பட்டு வந்துள்ளத உணர்த்தும் இன்றும் தமிழர் பண்பாட்டில் பூனை குறுக்கே செல்லல், விதவை எதிரே வருதல் போன்ற சகுங்களைப் பெரும்பாலானோர் பின்பற்றி வருவதை காண முடிகிறது (Ilampuranar, 2010).

## தெய்வ நம்பிக்கையும் திணை வைப்பு முறையும்

பண்பாட்டினை உலகறியச் செய்த தமிழர் தெய்வ வழிபாட்டில் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தனர் என்பதை

“மாயோன் மேய காடுறை உலகமும்

சேயோன் மேய மைவரை உலகமும்

வேந்தன் மேய தீம்புனல் உலகமும்

வருணன் மேய பெருமணல் உலகமும்

முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்

சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"

என்று பகர்ந்துள்ளது தொல்காப்பியம். அந்தந்த நிலத்திற்குறிய மக்கள் அந்தந்த தெய்வங்களைப் போற்றி வணங்கியுள்ளமையும் அந்தந்த திணைக்குரிய மக்களின் தெய்வ நம்பிக்கையும் வெளிப்பட்டுள்ளதையும் தமிழர் பண்பாட்டில் இவையாவும் நீங்கா இடம் பெற்றுள்ளதையும் இதன் வாயிலாக அறிய முடிகிறது (Ilampuranar, 2010).

## முடிவுரை

தொல்காப்பியம் கூறும் தமிழர் பண்பாட்டில் களவு, கற்பு இரண்டையும் பண்பாட்டில் இருகண்களாகக் கொண்டுள்ளது. இவ்விரண்டும் உணர்வு, இளமை, அன்பு போன்றவற்றால் முகிழ்ப்பன. இவை தமிழர் வாழ்வில் ஒன்றாகக் கலந்து விருந்தோம்பல், தெய்வ நம்பிக்கை, திணைப் பகுப்புமுறை, நம்பிக்கை போன்றவையாக நிலைப் பெற்றுள்ளதையும் இவை தமிழரின் பண்பாட்டு விழுமியங்களை பறைசாற்றும் விதமாக அமைந்துள்ளதையும் அறியலாம். மேலும் ஒரு சமுதாயத்தின் விழுமியங்கள் கதைகள், பழமொழிகள், சமயம் என்பவற்றினூடாகவும் வெளிப்படுகின்றன.

## References

Ilampuranar, (2010) Tholkappiyam Porulathikaram, Saradha pathippagam, Chennai, Tamil Nadu, India.

Parimelalhagar, (2015) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

Subramanian, S, V., (2008) Tholkaapiyam Thelivurai, Manivasagar Pathippagam, Chennai, India.

Subramanian, K. V., (2007) Natrinai (Moolamum Uraiyum), Manivaasagar Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License